**குருணாகல் மாவட்டத்தின் 56 கமநல சேவைச் செயற்குழுக்கள் - 2024**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 குருணாகல் மாவட்டத்தின் 56 கமநலசேவை செயற்குழுக்களின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் போதிய கணக்கீட்டுக் கொள்கைகளிற்கு உரித்தான தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு உரித்தான குறிப்புகளை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரைகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 58 (1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** 2024 ஆம் ஆண்டு தொடர்பான குருணாகல் மாவட்டத்தின் 56 கமநலசேவை செயற்குழுக்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்ததுடன், அவற்றில் 06 செயற்குழுக்களின் அபிப்பிராயம் மறுக்கப்பட்டிருந்ததுடன் ஒரு செயற்குழுவிற்கு பாதகமான அபிப்பிராயமும் 49 செயற்குழுக்களுக்கு முனைப்பழியுள்ள அபிப்பிராயமும் வழங்கப்பட்டிருந்தது. அந்த அபிப்பிராயங்களுக்கான காரணங்களாக அமைந்த பொருண்மையான தவறுகள் கீழே தரப்பட்டுள்ளன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் உட்பட கணக்கீட்டு கொள்கைகளுடன் இணக்கமின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இறுதி இருப்பு மீதி, கிரயம் அல்லது தேறிய கைக்கெட்டும் பெறுமதி ஆகியவற்றில் குறைவான பெறுமதியில் கணக்கிடப்பட்டு நிதி அறிக்கைகளில் காட்டப்பட வேண்டிய போதிலும் 34 செயற்குழுக்கள் இதனைப் பின்பற்றாது, தேறிய கைக்கெட்டும் பெறுமதியைக் கணக்கிடாது கிரயத்திற்கு கணக்கிட்டிருந்தன. | 2025 ஆம் ஆண்டு முதல் இதனைச் சீர்செய்ய அறிவுறுத்தப்படும். | பொதுத் துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கமைய இருப்புகள் மதிப்பிடப்பட வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 23 கமநல சேவை செயற்குழுக்களில் 34 ஏக்கர் 01 ரூட் 13 பேர்ச்சஸ் காணிகள் சுவீகரிக்கப்பட்டு கணக்கிடப்படு வதற்கும் 26 செயற்குழுக்களில் 31 ஏக்கர் 02 ரூட் காணிகள் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுவீகரிக்கப்படாத காணிகளைச் சுவீகரிக்கவும், காணிகளை மதிப்பிட்டு பெறுமதிகளைக் கணக்கிடவும் நடவடிக்கை எடுக்கப்படும். | விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் படி செயற்குழுவிற்குச் சொந்தமான காணிகள் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 15 கமநல சேவை செயற்குழுக்களில் பயிர் நடுகை இயந்திரங்கள், களை அகற்றும் இயந்திரங்கள், மல்டி சொபர் இயந்திரங்கள் போன்ற 10 இயந்திரங்கள், 06 செயற்குழுக் கட்டிடங்கள், ஒரு கமநல வங்கி கட்டிடம், ஒரு அரச விடுதி, 05 விற்பனை நிலையங்கள், உணவகம் ஒன்று, 09 களஞ்சியக் கட்டிடங்கள் மற்றும் 06 அலுவலக உபகரணங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படவில்லை. | 2025 ஆம் ஆண்டிற்குள் கணக்கிடுவதற்கு அறிவுறுத்தப்படும். | செயற்குழுவிற்குச் சொந்தமான அனைத்துச் சொத்துக்களும் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். |
| (இ) | 05 கமநல சேவை செயற்குழுக்களில் கடந்த ஆண்டிற்குரிய ரூபா 252,838 வருமானமும், 07 செயற்குழுக் களில் ரூபா 1,277,265 செலவுகளும் மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் செலவு களாகக் கணக்கிடப்பட்டுள்ளன. | சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் செலவுகள் சரியாக வகைப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 09 கமநல சேவைச் செயற்குழுக்களில் ரூபா 154,879 வருமானமும், 02 செயற்குழுக் களில் ரூபா 5,635 செலவினமும், 04 செயற்குழுக்களில் ரூபா 235,622 நடைமுறைச் சொத்துக்களும் 03 செயற்குழுக் களில் ரூபா 11,516 நடைமுறைப் பொறுப்புகளும் ஒரு செயற்குழுவில் ரூபா 20,285 நடைமுறையல்லாச் சொத்துக்களும் ஒரு செயற் குழுவில் ரூபா 488,631 திரட்டப்பட்ட நிதியும் மீளாய்வாண்டில் கூடுதலாகக் கணக்கிடப்பட்டிருந்ததுடன் 10 கமநல சேவைச் செயற்குழுக் களில் ரூபா 319,334 வருமானமும், 04 செயற்குழுக்களில் ரூபா 39,608 செலவினமும், 08 செயற்குழுக் களில் ரூபா 914,010 நடைமுறைச் சொத்துக்களும், 04 செயற்குழுக்களில் ரூபா 15,416 நடைமுறைப் பொறுப்புக் களும், ஒரு செயற்குழுவில் ரூபா 80,409 நடைமுறையல்லாச் சொத்துக்களும் ஒரு செயற் குழுவில் ரூபா 2,600 திரட்டப் பட்ட நிதியும் மீளாய்வாண்டின் போது குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தது. | சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் தயாரிக் கப்படுகையில் நிதி ஆண்டிற்கு உரித்தான வருமானம், செலவு, சொத்து மற்றும் பொறுப்புகளை முழுமை யாகவும் சரியாகவும் கணக்கிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்கான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை வலுப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 09 செயற்குழுக்களில் கணக்கிடப்பட்டிருந்த ரூபா 224,709 பெறுமதியான இருப்புகளும், 11 செயற் குழுக்களில் கணக்கிடப் பட்டிருந்த ரூபா 2,791,180 பெறுமதியான 15 நிலையான சொத்து அலகுகளும் மற்றும் 453 வகை இருப்புகளும் பௌதிக ரீதியாகக் காணப்படவில்லை. | பௌதிக ரீதியாக இல்லாமைக்கான காரணங்களைக் கண்டறிந்து கணக்குகளில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | முறையான ஆய்வை மேற்கொண்டு காரணங்களைக் கண்டறிந்து, அதற்கமைய நிதிக்கூற்றுக்களில் ஏற்றவகையில் சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும். |

### 1.3.3 இணக்கமற்ற கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 20 கமநல சேவை செயற்குழுக்களின் 42 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப் பட்டுள்ள மீதிகள் துணை ஆவணங்களுடன் ஒப்பிடும் போது மொத்தமாக ரூபா 23,492,917 பெறுமதியான வேறுபாடுகள் காணப்பட்டன. | சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | இணக்கமற்ற மீதிகளை இணக்கம் செய்து சரியான மீதிகளை நிதிக்கூற்றுக் களில் சீராக்கம் செய்தல் வேண்டும். |

### 1.3.4 அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 14 கமநல சேவை செயற்குழுக்களில் ரூபா 130,100,785 பெறுமதியான 418 நாட்குறிப்பேட்டுப் பதிவுகளுக்கு முறையான அனுமதி பெறப்பட்டிருக்க வில்லை. | சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான அனுமதியுடன் நாட்குறிப்புப் பதிவுகள் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 08 கமநல சேவை செயற்குழுக்கள் முறை யான அனுமதியின்றி ரூபா 285,997 பெறுமதியான 18 வரவு மீதிகளையும், ரூபா 652,476 பெறுமதியான 19 செலவு மீதிகளையும் திரட்டப்பட்ட நிதியிலிருந்து பதிவளித்திருந்தன. | செயற்பாட்டுக் குழுவின் அனுமதியுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதாக | பதிவளிப்பதற்கும் திரட்டப்பட்ட நிதியில் சீராக்கப்படுவதற்கும் முறையான அனுமதி பெறப்பட வேண்டியதுடன் அவ்வாறு செயற்படாமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.3.5 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 02 கமநல சேவைச் செயற்குழுக்களில் 2005 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளிலிருந்து நிதிக் | சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான ஆய்வை மேற்கொண்டு கணக்கு மீதிகளைச் சரிசெய்ய வேண்டும். |

கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்ட மொத்த பெறுமதி ரூபா 77,054 கொண்ட 02 தொங்கல் கணக்கு செலவு மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் 51 கமநல சேவைச் செயற்குழுக்களின் நிதிக்கூற்றுக் களில் காட்டப்பட்டுள்ள மொத்த பெறுமதி ரூபா 165,579,016 கொண்ட 203 சொத்து விடயங்கள் மற்றும் 42 கமநல சேவைச் செயற்குழுக்களின் மொத்த பெறுமதி ரூபா 88,739,639 கொண்ட 103 பொறுப்பு விடயங் கள் தொடர்பான விரிவான குறிப்புக்கள், மதிப்பீட்டு அறிக்கை கள், மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழ்கள், தொடர்புடைய சொத்து ஆவணங்கள் மற்றும் உரிமைச் சான்றிதழ்கள் போன்ற சான்றுகள் இன்மையால், அந்த கணக்கு விடயங்களைத் கணக்காய்வில் திருப்திகரமாகச் சரிபார்க்க முடியவில்லை. | முறையான பயிற்சி மற்றும் அறிவுறுத்தல்களை வழங்கி, எதிர்காலக் கணக்கு அறிக்கைகளில் இந்தக் குறைபாடுகளைச் சரிசெய்து சரியாகச் சமர்ப்பிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்களைப் பேண வேண்டும் என்பதுடன், தொடர்புடைய ஆவணங்களைத் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

### 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடன ான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம் | | | |
| (i) | 14 (3) ஆம் பிரிவு | பிணக்குகளுக்குட்பட்ட வயல் காணிகளுக்காக விவசாயி களால் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 2,859,097 நிதியை 15 செயற்குழுக்கள் காணி உரிமையாளர்களுக்கு வழங்காது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபை நிதியிலேயே வைத்திருந்தன | வழங்க முடியாத நிலுவைப் பணத்தை நீதிமன்றத்தில் வைப்பிலிடு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கமநல அபிவிருத்திச் சட்ட ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 52 ஆம் பிரிவு | ஒவ்வொரு போகத்திற்கு முன்பும் கமநல செயற்குழு அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்திற்காக விவசாயத் திட்டத்தை வகுக்க வேண்டும். எனினும் 44 செயற்குழுக்களால் அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்பாட்டுத்திட்டமும் பாதீட்டு மதிப்பீடும் வகுக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளதாக. | கமநல அபிவிருத்திச் சட்ட ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவ்வாறு செயற்படாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 53 (4) ஆம் பிரிவு | காணி பெயர்ப்பட்டியல்கள் ஒவ்வொரு 03 ஆண்டுகளுக்கு ஒருமுறை மறுசீரமைக்கப்பட வேண்டுமெனினும், 46 கமநல சேவைக் குழுக்களால் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படுவதாக | கமநல அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடு களுக்கமைய செயற் பட வேண்டியதுடன் அவ்வாறு செயற்படாத உத்தியோகத்தர்க ளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 133 | 20 கமநல சேவைச் செயற்குழுக்களில் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தாலோ அல்லது பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் தலைமை அலுவலகத் தினால் தெரிவு செய்யப்பட்ட கமநல சேவை மையங்களில் கணக்காய்வு மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டு உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 264 | ஒவ்வொரு கொடுப்பனவிற்கும் உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தத் தொகை கிடைக்கப்பெற்றமைக்கான பற்றுச்சீட்டு பெறுநரிடமிருந்து பெறப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனினும், | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டு உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீளாய்வாண்டில் ரூபா 3,305,837 பெறுமதியான 14 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தொடர்பில் 05 கமநல சேவைக் குழுக்கள் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் II ஆம் பாகத்தின் 09 ஆம் பந்தி | பணம் அல்லது கையிருப்புகளைக் கையாள் வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அனைத்து உத்தியோகத்தர் களும் பிணை வைப்பிலிட வேண்டுமெனினும், 56 கமநல சேவைக் குழுக்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர், நிறைவேற்றுச் செயலாளர், கமநல வங்கி எழுதுவினைஞர்கள், கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் பிணை வைப்பிலிடாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. மேலும், விவசாய அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2023 சனவரி 23 ஆம் திகதிய 7/2/15/3/3(VII) தாவ ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம் குறித்த நிதிப் பிரமாணத்திற்கு முரணான வகையில் கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் பிணை வைப்பதிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தனர். | சுற்றறிக்கையின் படி விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் பிணை வைப்பதிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய உத்தியோகத்தர் கள் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு அமைய செயற்பட வேண்டும். |
| (இ) | விவசாய அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கைகள் | | | |
| (i) | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய 04/2012 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 5.6 (i) பந்தி | கமநல வங்கியானது கமநல சேவைக் குழுவின் ஒரு அலகாகும் என்பதால், கமநல வங்கிக்குரிய அனைத்துக் கணக்குகளும் கமநல் சேவைக் குழுவின் வருடாந்தக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப் பட வேண்டுமெனினும், 56 | திணைக்களச் சுற்றறிக்கைகள் மற்றும் விவசாய அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை விதிகளுக்கமைய செயற்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குழுக்களும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 2014 ஓகஸ்ட் 22 ஆம் திகதிய 7/2014 (107 திருத்தம் III) ஆம் இலக்கச் சுற்றறிக்கை | தினசரி குழு எழுதுவினைஞர் ஒருவரிடம் வைத்திருக்கக்கூடிய அதிகூடிய பணத் தொகை ரூபா 10,000 ஆக இருந்த போதிலும், 27 கமநல சேவைக் குழுக்களில் 479 சந்தர்ப்பங்களில் அதற்கு மேலதிகமான தொகை கையிருப்பில் வைக்கப்பட்டிருந்தது. | முறையாகச் செயற்படுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை விதிகளுக்கமைய செயற்பட வேண்டியதுடன், அது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்த வேண்டும். |
| (iii) | 2019 ஒக்டோபர் 22 ஆம் திகதிய 7/12/5/4 ஆம் இலக்கக் கடிதம் மற்றும் 2020 ஒக்டோபர் 08 ஆம் திகதிய 09/2020 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | பதிவு செய்யப்பட்ட அனைத்து விவசாய அமைப்புகளினதும் கொடுக்கல் வாங்கல்கள் உரிய கமநல வங்கியின் சேமிப்புக் கணக்கினூடாக மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், 36 கமநல வங்கிகளிலுள்ள 1,531 விவசாய அமைப்புகளில் 979 அமைப்புகள் கமநல வங்கியில் கணக்குகளை ஆரம்பித்திருக்கவில்லை. | விவசாய அமைப்புகளைத் தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | முறையான வேலைத்திட்டமொன்றினூடாக சுற்றறிக்கை விதிகளுக்கமைய செயற்பட்டு கமநல வங்கிகளில் அமைப்பு கணக்குகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நித விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் படி 2024 ஆண்டில் 56 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 37,598,275 இற்கான தேறிய மிகையும், 56 கமநல வங்கிகளின் கூட்டுத்தொகை ரூபா 17,207,830 இற்கான மிகையும் காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த 2023 ஆம் ஆண்டின் 56 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 31,017,816 ஆகவும், 56 கமநல வங்கிகளின் கூட்டுத்தொகை ரூபா 23,195,294 ஆகவும் காணப்பட்டது.

### 2.1.1 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

மீளாய்வாண்டின் 49 கமநல சேவை செயற்குழுக்களில் ரூபா 40,246,606 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் 52 செயற்குழுக்களின் மிகை ரூபா 31,774,009 ஆகக் காணப்பட்டது. இதற்கமைய மிகையில் ரூபா 8,472,597 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் 07 செயற்குழுக்களில் ரூபா 2,648,331 பற்றாக்குறை நிலவியதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் 04 செயற்குழுக்களில் நிலவிய பற்றாக்குறை ரூபா 756,193 ஆகக் காணப்பட்டது. இதற்கமைய பற்றாக்குறையின் அதிகரிப்பு ரூபா 1,892,138 ஆக இருந்த போதிலும், மிகையில் அதிகரிப்புடன் சீர்செய்யப்பட்டதன் காரணமாக 56 செயற்குழுக்களின் ஒட்டுமொத்த மிகை ரூபா 6,580,459 இனால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மேலதிக நிதியை முதலீடு செய்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று 56 கமநல சேவைக் குழுக்கள் மற்றும் 56 கமநல வங்கிகளினால் மொத்தம் ரூபா 110,325,810 பயனுள்ள வகையில் முதலீடு செய்யப்படாமல் அரச வர்த்தக வங்கிகளின் நடைமுறைக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்ததுடன், மொத்தம் ரூபா 130,272,307 குறைந்த வட்டி வருமானம் கிடைக்கப்பெறும் சேமிப்புத் வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இதற்கமைய மேலதிக பணம் பயனுள்ள முறையில் முதலீடு செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. ' | நிதியினைப் பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | முறையான அனுமதியின் கீழ் மேலதிக நிதியை அதிக பயனுள்ள முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்த வேண்டும். ' |
| (ஆ) | 03 கமநல சேவைக் குழுக்களிடமுள்ள 08 வங்கிக் கணக்குகள் நீண்டகாலமாகச் செயலற்ற நிலையில் காணப்பட்டதுடன், அக்கணக்குகளின் மொத்த மீதி ரூபா 2,232,360 ஆகும். இப்பணத்தைப் பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்தி வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ' | பயனுள்ள முதலீடுகளில் (நிலையான வைப்புகள்) ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ' | முறையான அனுமதியின் கீழ் செயலற்றுக் கிடக்கும் பணத்தைப் பயனுள்ள முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்த வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவத்தகம கமநல சேவைச் செயற்குழுவின் 2020 ஆம் ஆண்டிற்குரிய இனங்காணப்பட்ட கையிருப்புப் பற்றாக்குறைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 771,097 மீளாய்வாண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், பணமோசடி தொடர்பான விசாரணை கள் நிறைவடையாத நிலையில், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் மீண்டும் சேவையில் அமர்த்தப் பட்டிருந்தார். | விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட்டு அறவிடப்பட வேண்டிய பணத்தை விரைவாக அறவிட்டு தாபன விதிக் கோவையின் விதிகளுக்கமைய ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரம்பே கமநல சேவை செயற் குழுவில் 1999 ஆம் ஆண்டிற்கு முன்னர் கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் ஒருவரால் கமநல வங்கிப் பணம் மற்றும் ஏக்கர் வரிப் பணம் என்பவற்றை முறையற்ற வகையில் பயன்படுத்தியமையால் ஏற்பட்ட நிதி மோசடிக்குரிய ரூபா 137,706 ஐ அறவிடுவதற்கு மீளாய்வாண்டிலும் | மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட்டு அறவிடப்பட வேண்டிய பணத்தை விரைவாக அறவிட்டு அப்பணத்தை உரிய காலத்தில் அறவிடத் தவறிய தரப்பினருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | நாதகனே கமநல வங்கியில் காசுப்புத்தகத்தை முறையாகச் சமப்படுத்தாமை, கடன் வழங்கும் போது காசோலைகளைத் தவறாகப் பயன்படுத்தியமை, பேரேடுகளில் பதியப்படாத கடன்கள் மற்றும் அவ்வட்டி என்பவற்றின் மூலம் 2020 சனவரி 01 முதல் 2021 யூலை 05 வரையான காலப்பகுதியில் ஏற்பட்ட ரூபா 2,954,156 பற்றாக்குறையை அறவிடுவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் 06 பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் காணாமல் போயிருந்ததுடன் அவற்றுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களும் பதியப்பட்டிருக்க வில்லை. | விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | விசாரணைகளை விரைவாக நிறைவு செய்து, அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதுடன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ' |
| (ஈ) | "தாரண" கமநல வங்கியின் பேரேடுகளைப் பரிசோதித்த போது கண்டறியப்பட்ட ரூபா 3,310,450 நிதி மோசடியில் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 2,491,649 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டிலும் அப்பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எஞ்சிய பணத்தை அறவிடுவதற்கு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அறவிடப்பட வேண்டிய பணத்தை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 முகாமைத்துவ செயற்திறமையின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சொத்துக்களைக் கையகப்படுத்தப் பட்டமை தொடர்பில் நீண்ட காலமாகச் செலுத்தப்பட வேண்டிய கடனாகக் கொண்டுவரப்பட்ட 33 கமநல சேவைச் செயற்குழுக்களின் ரூபா 22,832,891 மொத்தக் கடன் மீதியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. இக்கடன்களுடன் தொடர்புடைய பல சொத்துக்கள் செயற்குழுக்களில் பௌதிக ரீதியாகக் காணப்பட வில்லை. | தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக | செலுத்தப்பட வேண்டிய கடன் மீதிகளைத் தீர்ப்பதற்கும், சொத்துக் கள் பௌதிக ரீதியாக இல்லாமைக்கான காரணங்களை ஆராய்ந்து முறையான நடவடிக்கை எடுக்கவும் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 19 கமநல சேவை செயற்குழுக்களில் நெற்செய்கைக்குப் பயன்படுத்தக் கூடிய "ஏ" தரத்தைச் சேர்ந்த தரிசு வயல் நிலங்களின் அளவு சுமார் 365 | 2025 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைய, வயல் | விவசாயச் சிறுபோக அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஒவ்வொரு வயல் நிலத்தையும் பொருத்த |

| | | | |
|---|---|---|---|
| | ஏக்கர் 01 ரூட் 36 பேர்ச்சஸ் ஆனதுடன் 11 கமநல சேவை செயற்குழுக்களில் நெற்செய்கை தவிர்ந்த ஏனைய பயிர்ச் செய்கைகளுக்குப் பயன்படுத்தக் கூடிய “பீ“ தரத்தைச் சேர்ந்த தரிசு வயல் நிலங்களின் அளவு சுமார் 145 ஏக்கர் 30 பேர்ச்சஸ் ஆகும். மேலும், 18 கமநல சேவை செயற்குழுக்களில் “சீ“ தரத்தைச் சேர்ந்த தரிசு வயல் நிலங்களின் அளவு சுமார் 620 ஏக்கர் 01 ரூட் 10 பேர்ச்சஸ் ஆகும். மீளாய்வாண்டின் போது இந்தத் தரிசு வயல் நிலங்களை நெற்செய்கைக்காகவோ அல்லது ஏனைய பயிர்ச் செய்கை களுக்காகவோ பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிலங்களைச் செய்கை பண்ணுவது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. | மான பயிர்ச் செய்கை களுக்காகப் பயன் படுத்துவதற்கு ஒரு முறையான வேலைத் திட்டத்தைத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். |
| (இ) | 12 கமநல சேவை செயற்குழுக்களில் நிலவிய ரூபா 1,672,704 பெறுமதியான காலாவதியான கையிருப்புகள் தொடர்பாக, 2006 திசம்பர் 08 ஆம் திகதியிட்ட 2006/08 ஆம் இலக்க மற்றும் அதன் திருத்தங்களை உள்ளடக்கிய 2017 நவம்பர் 28 ஆம் திகதியிட்ட 16/2017 ஆம் இலக்க விவசாய அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விவசாயச் சேவை ஆணையாளரின் அனுமதியைப் பெற்று இம் மீதிகளைத் பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | சுற்றறிக்கைகளுக்கு அமைய நடவடிக்கை எடுத்து, காலாவதியான கையிருப்புகளை முறையாக கையிருப்புப் புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 05 கமநல சேவை செயற்குழுக்களில் பல வருடங்களாக முன்கொண்டு வரப்பட்டிருந்த ஏக்கர் வரி நிலுவை வருமானம் ரூபா 376,823 தொகையையும் 03 கமநல சேவை செயற்குழுக்களில் நிலுவையாக இருந்த அறை வாடகை வருமானம் ரூபா 275,195 தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிலுவை வருமானங் களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அவற்றை உரிய காலத்தில் அறவிடுவதற்குத் தவறிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 10 கமநல சேவை செயற் குழுக்களிலிருந்து 2000 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கு உரித்தாக ரூபா 249,460 கூட்டுத்தொகையான கணக்காய்வுக் கட்டணம் அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. | விரைவாகச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | ஒரு துரித வேலைத் திட்டத்தை வகுத்து, நிலுவையில் உள்ள கணக்காய்வுக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 செயற்பாட்டுத் திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பல வருடங்களாகக் கொண்டு வரப்படும் 47 கமநல சேவைக் குழுக்களின் ரூபா 48,238,177 பெறுமதியான 294 பெறப்பட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கும், 46 கமநல சேவைக் குழுக்களின் ரூபா 51,089,328 பெறுமதியான 244 செலுத்தப்பட வேண்டிய மீதிகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய கணக்குகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக | முறையான வகையில் மீதிகளை உறுதிப்படுத்திய பின்னர், நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாகக் காணப்படும் பெறப்பட வேண்டிய மீதி மற்றும் செலுத்தப்பட வேண்டிய மீதிகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 சொத்து முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 26 கமநல சேவைச் செயற்குழுக்களில் 07 விவசாய உபகரணங்கள், 04 களஞ்சிய சாலைகள், சொட்டுநீர்ப் பாசனத் தொகுதி ஒன்று, 04 நாற்று நடுகை இயந்திரங்கள், 13 களை பிடுங்கும் இயந்திரங்கள், 05 நாற்று மேடைகள், ஒரு சுவர் பெட்டகம், 03 விற்பனை நிலையங்கள், 02 உணவகங் கள், ஓர் உறை தைக்கும் இயந்திரம், நாணயங்களை எண்ணும் இயந்திரம் ஒன்று, ஒரு ஸ்கான் உபகரணம், 03 அச்சுப்பொறிகள், 02 கணினிகள் மற்றும் அதன் சாதனங்கள், ஒரு LED தொலைக்காட்சி, 03 விதை தெளிக்கும் இயந்திரங் கள், பால் விற்பனை நிலையக் கட்டிடம் மற்றும் உபகரணங்கள், ஒரு டெப் (Tab), 139 நீர் மானி கள் மற்றும் சிறு நீர்ப்பாசன உபகரணங்கள் என்பன செயலற்ற நிலையிலும் குறைந்த பயன்பாட்டிலும் காணப்பட்டன. | பயன்படுத்தக்கூடிய பொருட் களை ஏனைய நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | பயன்படுத்தக்கூடிய சொத்துக்கள் மற்றும் உபகரணங்களைப் பிரயோகிப்பதற்கும் ஏனைய சொத்துக்கள் மற்றும் உபகரணங்களை முறைப்படி அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 55 கமநல சேவைச் செயற்குழுக்கள் மற்றும் கமநல வங்கிகளில் கணினி மென் பொருள் தொகுதி யொன்றை நிறுவுவதற்காக மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் ரூபா 20,348,084 | திணைக்களத்தின் பெறுகைச் சபை அறிவுறுத்தல் களுக்கமைய கணினி சாதனங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | விரைவான வேலைத் திட்டமொன்றை முன்னெடுத்து திட்டமிட்டபடி மென்பொருள் தொகுதியை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போதும் அத் தொகுதியை நிறுவியிராமையால் ஏற்கப்பட்ட அச்செலவு வீணான செலவாக மாறியிருந்தது. | | |
| (இ) | 14 கமநல சேவைச் செயற்குழுக்களில் 196 குளங் களும் 63 அணைகளும் செயலற்ற நிலையில் கைவிடப் பட்டிருந்ததுடன் 118 கால்வாய் களில் 03 கால்வாய்கள் செயலற்ற நிலையில் காணப்பட்டன. | நிதி ஒதுக்கீடு போதாமை மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பற்றாக்குறையினால் புனரமைப்புப் பணிகளைச் செய்ய முடியவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | போதிய நிதி ஒதுக்கீடுகளைப் பெற்று நீர்ப்பாசனப் புனரமைப்புப் பணிகளை இற்றைப் படுத்தப்பட்ட முறையில் முன்னெடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு 27 கமநல சேவை செயற் குழுக்களில் 2,306 விவசாயக் கிணறுகளும் 2,012 கிலோமீற்றர் விவசாய வீதிகளும் காணப்பட்ட போதிலும், 241 விவசாயக் கிணறுகளும் 520 கிலோமீற்றர் விவசாய வீதிகளும் இயங்காத நிலையில் காணப்பட்ட மையினால் கைவிடப்பட்டிருந்த துடன், அவற்றை புனரமைப்பு செய்து விவசாய நடவடிக்கை களுக்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதி ஒதுக்கீடு இன்மையால் நடவடிக்கை எடுக்க முடியாது போனதாக. | போதுமான நிதி ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்து புனரமைப்பு நடவடிக்கைகளை இற்றைப் படுத்தும் வகையில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைப் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 40 கமநல சேவைச் செயற்குழுக்களில் காணப்பட்ட 3,222 சிறிய நீர்ப்பாசனக் குளங்கள், 1,072 அணைக்கட்டுகள் மற்றும் 118 கால்வாய்களில் மீளாய்வாண்டில் புனரமைப்பு நடவடிக்கை களுக்காக முன்னுரிமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட 710 செயற்திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 70 செயற்திட்டங்கள் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. | ஒதுக்கப்படும் நிதி ஏற்பாடு மற்றும் நிலவும் உத்தியோகத்தர் பற்றாக்குறை என்பவற்றின் அடிப்படையில் அடையக்கூடிய அதிகபட்ச முன்னேற்றத்தை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | முறையான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்து நீர்ப்பாசனக் கைத்தொழில் மற்றும் நீர்ப்பாசனப் புனரமைப்பு நடவடிக்கைகளை இற்றைப்படுத்தப்பட்ட வகையில் மேற்கொள் வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பு மற்றும் நல்லாட்சியும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய 56 கமநல செயல் நடவடிக்கைத் திட்டங்கள் முன்னேற்ற | | |

| | | |
|---|---|---|
| சேவைச் செயற்குழுக்களினதும் செயல் நடவடிக்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றுடன் தொடர்புடைய முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப் படுவதாகவும் 2025 ஆம் ஆண்டு முதல் செயலாற்றுகை அறிக்கை யொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய 50 செயற்குழுக்களினால் தயாரிக்கப்பட்டிருந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளுக்கமைய, 810 வருமானம் மற்றும் செலவு விடயங்கள் தொடர்பாக 01 சதவீதத்திலிருந்து 30,607 சதவீதம் வரை வேறுபாடுகள் காணப்பட்டன. இதன் காரணமாக வரவு செலவுத் திட்டமானது செயற்குழுக்களினால் ஒரு பயனுள்ள கட்டுப்பாட்டு உத்தியாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | உத்தியோகத்தர் பற்றாக்குறை காரணமாக உரிய பணிகளை நிறைவேற்ற முடியாமல் போனமையினால் இவ்வாறான வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வரவு செலவுத் திட்டத்தை ஒரு பயனுள்ள கட்டுப்பாட்டு உத்தியாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 5. கமநல வங்கிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மஹகிரில்ல கமநல வங்கியில் ரூபா 245,813 வருமானம் அதிகமாகவும், அம்பன்பொல கமநல வங்கியில் ரூபா 503,421 செலவினம் குறைவாகவும் கணக்கிடப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | கணக்கு மீதிகளைச் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 06 கமநல வங்கிகளில் ரூபா 30,801,996 பெறுமதியான 1,522 நாட்குறிப்புப் பதிவுகளுக்கு முறையான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | நாட்குறிப்புப் பதிவுகளுக்கு முறையான அனுமதி பெறப்பட வேண்டும். |
| (இ) | நாதகனே கமநல வங்கியில் ரூபா 4,436,700 பெறுமதியான 5,001 பங்கு வைப்புகளுக்குப் பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஆவணங்களை முறையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பேரேட்டுக் கணக்குகள் முறையாகப் பேணப்பட வேண்டியதுடன், கணக்கீட்டுச் செயன்முறை வலுப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 15 கமநல வங்கிகளின் 35,838 பங்கு வைப்புகளில் 22,603 வைப்புகளும், 14 கமநல வங்கிகளின் 17,097 சாதாரண வைப்புகளில் 18,964 வைப்பு களும், 21 கமநல வங்கிகளின் 2,188 சிறுவர் வைப்புகளில் 1,465 வைப்புகளும், 06 | எதிர்காலத்தில் அக்கணக்குகளைச் செயலில் வைத்திருப்பதற்கு பிரதேச உத்தியோகத்தர்கள் ஊடாக அறிவுறுத்தல்கள் | கணக்குகளைச் செயலில் வைத்திருப்பதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கமநல வங்கிக ளின் 180 கமநல அமைப்புகளின் வைப்புகளில் 58 வைப்புகளும், 15 கமநல வங்கிகளின் 1,330 சிறு குழு வைப்புகளில் 683 வைப்புகளும் 12 கமநல வங்கிகளின் 388 ”சித்தமு” மகளிர் வைப்புகளில் 98 வைப்பு களும் எவ்வித செயற்பாடின்றி ஆரம்ப வைப்புகளுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டு செயலற்ற நிலையில் காணப்பட்டன. | வழங்கப்படும். | |
| (உ) | கடந்த காலப்பகுதிக்குரிய 20 கமநல வங்கிகளில் மரணித்த 40 கடன் பெறுநர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,553,721 கடன் நிலுவைகளை மீளாய்வாண்டின் போது சம்பந்தப்பட்ட பிணையாளர் களிடமிருந்தேனும் அறவிடப்படு வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தலைமை அலுவலகத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக. | துரித வேலைத்திட்டமொன்றின் மூலம் பிணையாளர்களிடமிருந்தேனும் நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 34 கமநல வங்கிகளில் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட மாதாந்த கொடுக்கல் வாங்கல்களைப் பரிசோதித்த போது, தினசரி வங்கி கொடுக்கல் வாங்கல்களின் சராசரி 01 முதல் 10 வரை மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | கொடுக்கல் வாங்கல்களைச் செயற்றிறன் மிக்க மற்றும் வினைத்திறனான மட்டத்தில் பேணுவதற்கு பிரதேச உத்தியோகத்தர்கள் ஊடாகத் தெளிவுபடுத்தப்படுவதாக. | துரித மற்றும் கவர்ச்சிகரமான வேலைத்திட்டமொன்றின் மூலம் கொடுக்கல் வாங்கல்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | பதிவு செய்யப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை 50,497 ஆகவும், வயல் நிலங்களின் அளவு 24,587 ஏக்கர்களாகவும் காணப்பட்ட போதிலும், 31 கமநல வங்கிகளுக்கு உட்பட்ட 869 பிரிவுகளில் 342 பிரிவுகளுக்கு கடந்த ஆண்டுகளில் கடன் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பிரிவிலுள்ள விவசாயி களின் கடன் தேவைகளை இனங்காண்பது மற்றும் அவற்றை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான அறிவுறுத்தல் களையும் வழிகாட்டல்களையும் வழங்குவது சம்பந்தப்பட்ட கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களின் பொறுப்பாக இருந்த போதிலும், அது முறையாக நிறைவேற்றப்படவில்லை. | கடன் வழங்குவது தொடர்பாக பிரதேச உத்தியோகத்தர்கள் ஊடாகத் தெளிவுபடுத்தப்படுவதாக. | வங்கி நிறுவப்பட்டதன் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக விவசாயிகளைத் தெளிவுபடுத்தி, கடன் வழங்குதலை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். |
| (ஏ) | விவசாய அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய 04/2012 மற்றும் 2020 ஒக்டோபர் 08 ஆம் திகதிய 09/2020 (04/2012 திருத்தம் II) இலக்கச் சுற்றறிக்கைகளுக்கமைய செயற்பட்டு, | அறவீடு செய்வதற்காக தீர்ப்பாயம் மற்றும் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | கடன் வழங்கல் மற்றும் அவற்றை உரிய காலத்தில் அறவிடாமை தொடர்பாக முறையான விசாரணையொன்றை முன்னெடுத்து, உத்தியோகத்தர்களினால் |

2003 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை 33 கமநல சேவைக் குழுக்களில் 1,158 விவசாயிகளிடமிருந்து ரூபா 107,451,657 பெறுமதியான கடன் நிலுவைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

ஏதேனும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளனவா என்பதைக் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்கும், சுற்றறிக்கைகளுக்கமைய கடன் பணத்தை உரிய காலப்பகுதிக்குள் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.